மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்போது, இது இனிமேல்தான் இந்த சர்க்கார் செய்ய வேண்டும் என்பதால், அதில் எந்த விதமான கருத்து வேறுபாடுகளும் இல்லாமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இந்திய சர்க்காருடைய ஆணைக்குட்பட்டு, சில இடங்களை ஸ்டாசுடரி ஏரியாவாகவும், மற்ற இடங்களில் இன்பார்மல் ரேஷன் என்றும் முன்னால் சர்க்கார் செய்திருந்தது. அதிலே பெரும்பகுதி மக்கள் கோயம்புத்தூரிலும், சென்னை நகரத்திலும் கிட்டத்தட்ட 30 லட்சம் மக்கள் வருகிறார்கள். அதில் பாரபட்சம் என்றோ அநியாயம் என்றோ எதுவும் இல்லை. நிர்வாகத்துக்குத் தக்கபடி, சில தகுதிகள், சில விதிமுறைகள் இவற்றை அனுசரித்து உட்படுத்தப்படுகிறது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, சிற்றூர்ப் பகுதிகளுக்கு அரிசி கொடுக்க முடியாவிட்டாலும், கோதுமை, ரவை போன்றவற்றை வழங்க, ஒவ்வொரு ஊராட்சியிலும் நியாயவிலைக் கடை திறக்க ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அரிசியைவிட கோதுமை இன்னும் முயல் கொம்பாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் பதினெட்டு வினாக்கள் இருக்கின்றன. அடுத்த வினா.

பால் அபிவிருத்தித் திட்டம்

* 229 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் பால் அபிவிருத்திக்காக புதிதாக ஏதேனும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) and (இ) சபை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

*230 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் இருக்கும் மொத்த மாடுகள் எத்தனை?

---

* 632-637-ம் பக்கங்களில் II இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.